OS.No. 131/2015

Dated : 10.10.2023

Time: 12.00 p.m to 12.30 p.m

P.W- 1 சாட்சி விஜயலட்சுமி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4-ம் பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை:

1) நான் இவ்வழக்கில் 2-ம் வாதி ஆவேன். நானும் மீனா என்பவரும் 1-ம் வாதியின் பிள்ளைகள். மேற்படி தந்தை கணேசனின் சொத்துக்களில் 3/18 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 27.10.2014 ல் 1-ம் பிரதிவாதி 4-ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த கிரய பத்திரம் செல்லாது என இ - பரிகாரம் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அந்த சொத்து தாவாவில் 3ம் இன சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் அணைத்தும் எர்ரமசமுத்திரம் கிராமத்தில் உள்ளது. நான் பெத்தநாயக்கன்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் திருமணமானதில் இருந்து அங்கு தான் வசித்து வருகிறேன்.

2) கணேசனின் மனைவியும் 1,2 பிரதிவாதியின் தாயாருமான ஈஸ்வரி 10.07.2008 ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி விவரம் என்னுடைய வழக்கில் சொல்லவில்லை. மேற்படி கணேசனுக்கும் பெரியம்மாளுக்கும் ஈஸ்வரி உயிருடன் இருக்கும் போதே திருமணம் நடைபெற்றதாக வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி திருமணம் நடந்ததற்கு நான் எந்த ஆவணமும் முன்நிறுத்தவில்லை என்றால் அது சிறிய கோவிலில் நடந்தது. மேற்படி கணேசன் பெரியம்மாளுக்கு திருமணம் நடந்ததாக எங்களால் 2-வது சாட்சியங்கள் மூலமாக கூட சட்டப்படி நிரூபிக்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

3) ஜெயராமன் 3-ம் பிரதிவாதி அவருக்கு பாகமாக வந்த சொத்தின் ஒரு பகுதி மாடி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த பரிவர்த்தனை மூலம் வந்த சொத்தை இவ்வழக்கில் 2-ம் இன சொத்தாக காண்பித்துள்ளேன். ஆனால் அந்த மாடி வீடு பற்றி வழக்கிலும் வழக்கு சொத்து விவரத்திலும் எங்கும் குறிப்பிடவில்லை. மேலும் அந்த மாடி வீட்டின் சொத்து மதிப்பை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் அந்த மதிப்பீட்டை நீதிமன்ற கட்டணத்திலும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். மேலும் அந்த மாடி வீட்டிற்கான நீதிமன்ற கட்டணமும் வழக்கில் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன காரணத்தால் மட்டுமே இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

4) என்னுடைய நிரபண வாக்குமூலத்தில் நான் கூறியுள்ள சங்கதிகள் அணைத்தும் தவறானது என்றால் சரியல்ல. மேலும் 4-ம் பிரதிவாதி கிரயம் பெற்றது முழுவதும் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. மேலும் அந்த ஆவணத்தை ரத்து செய்ய கோரும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி 4-ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை. மேற்படி கணேசனின் தாயார் 09.09.1996 ல் ஈஸ்வரி பெயருக்கு ஒரு உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பொய். அந்த உண்ணாமலை அம்மாள் 09.11.1996 ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயில் மூலம் அந்த சொத்துக்கள் ஈஸ்வரிக்கு முழுவதுமாக பாத்தியப்பட்டது என்றால் அது பொய். அந்த உரிமையை மறுத்தளிக்கவும் அதில் பாகம் கோரவும் வாதிகளான எங்களுக்கும் எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் அது தவறு. எவ்வாறாயினும் பிரதிவாதிகளுக்கு எதிராக எதிரிடை அனுபவம் மூலமாக நாங்கள் சொத்துக்களின் உரிமையை இழந்துவிட்டோம் என்றால் சரியல்ல.

5) மேலும் பெரியம்மாளுக்கும் கணேசனுக்கும் எவ்வித திருமண பந்தமும் ஏற்படவே இல்லை என்றால் அது தவறு. எனவே கணேசனின் சொத்துக்களில் நான் எவ்வித பாகமும் கோரமுடியாது என்றால் அது தவறு. எனவே என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எப்போதும் நாங்கள் சுவாதீனத்தில் இருந்ததே இல்லை என்றால் அது தவறு. தாவா மூலம் எவ்வித தீர்ப்பாணையும் நாங்கள் பெற முடியாது, எவ்வித உருத்து கட்டளையும் பெற முடியாது என்றால் சரியல்ல. மேலும் 03.12.1993 ல் ஏற்பட்ட பரிவர்த்தனை பத்திரம் சட்டப்படி செல்லும் என்றால் அது பொய். மேலும் அது குறித்து எவிவதி பரிகாரமும் நான் கோர முடியாது என்றால் சரியல்ல. மேலும் மேற்சொன்ன பாக பத்திர்ம் செல்லாது என சொல்லும் அதிகாரம் எங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 4-ம் பிரதிவாதி பெற்ற கிரயம் செல்லும் என்றும் அது எங்களை கட்டுப்படுத்தும் என்றால் அது தவறு. எங்களுடைய சுவாதீனம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு. மேற்படி பிரதிவாதிகள் தாவா சொத்து குறித்து எவ்வித பாரதீனமும் செய்ய முடியும் என்றால் அது தவறு.

(பிரதிவாதிகள் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**